DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 2 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 5** |
| **Name** | **:** | ராஜன் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**5.11.2025**

**முதல் விசாரணை :**

நான் கூடலூர் காலம்புலாவில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி அமீரையும், 2ஆம் எதிரி நிஜாமுதினையும் தெரியும். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1ஐ தெரியும். எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது, போலிசார் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் – II ல் இருக்கும் ராஜன் என்ற 2வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் மட்டும் Exhibit P3 ஆகும், என்கூட அந்த ஆவணத்தில்

கையொப்பம் போட்டது யார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:

நான் போலிசார் விசாரணையில் 15.8.2021ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு போலிசார் என் முன்னிலையிலும், ரமனா முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசரும், வரைபடமும் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், ரமனாவும் சாட்சி கையொப்பம் போட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால், நான் அப்படி சொல்லவில்லை. நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

<u>1ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

இல்லை.

<u>2ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.05 16:28:14 +0530